பட்டுச் சாறிகள்
பட்டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
பெரியவர்களுக்கும் புதிய
டிசைன் புடைவைகளை
தெரிவு செய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

மக்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

மனமிசைந்து ஏவி
மங்கையர் நாடும் ஒரே
★ புடைவை ஸ்தாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 01 வியாழக்கிழமை (17 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 358

# பத்து தொன் ஆயுதங்களுடன் கப்பல் வடபகுதியை நோக்கி வருகின்றதாம்!

## தமிழரின் கடைக்கு குண்டுவீச்சு

கொழும்பு, நவ. 17

ஜனாதிபதித் தேர்தலைய டுத்து மாத்தளையில் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரின் வர்த்தக நிலையம் கைக்குண்டு வீச்சுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில் பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான உடைமைகள் சேதமடைந்தன.

## உணர்வுடன் இடம்பெறும் எழுச்சி வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 17

மாவீரர் எழுச்சிவார நிகழ்வுகள் கடந்த இரு நாட்களாக மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

வீடுகள், பொது இடங்கள், அரச, தனியார் அலுவலகங்கள், மைதானங்கள் போன்றவை சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

மாவீரர் வார செயற்பாடுகள் கிராமங்கள் தோறும் உணர்வுபூர்வமாக இடம் பெற்று வருகின்றன.

வீதிகள், குளங்கள், வேடிகால்கள் துப்பரவு செய்யும் பணியும் நடைபெறுகின்றது.

யாழ். ஆஸ்பத்திரி சுற்றாடலும் சுத்திகரிக்கப் படுகின்றது.

(உ-3-15-31-89)

## பன்விலையில் பதற்றம்! இராணுவம் விரைவு!!

கொழும்பு,நவ.17

ஜனாதிபதி தேர்தலை அடுத்து பன்விலை,மவுசாக்கலை பகுதியில் இடம் பெற்ற சம்பவங்களில் கலாபொக்க தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் கொல்லப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடைகள் எரிக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து— அமைச்சர் தொண்டமானின் கோரிக்கையின் பேரில்— அங்கு இராணுவம் அனுப்பப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிலியந்தலையிலும் 6 கடைகள் தீக்கிரையாக்கப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

## தொண்டாவின் எம்.பிக்கள் அவருக்கு எதிரணியில்!

கொழும்பு,நவ.17

கடந்த ஓகஸ்டில் நடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடைந்ததன் பின்னர் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில இருந்த இ.தொ.கா.தலைவர் எஸ். தொண்டமானுக்கு அரசாங்கத்தரப்பில் முன்வரிசையில்ஆசனம் கொடுக்கப் பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சராக பதவி ஏற்ற பின்னர் முதல் தடவையாக கடந்த திங்கட்கிழமை தான் தொண்ட

(3ஆம் பக்கம் பார்க்க)

## பிடிப்பதற்கு ஏனைய நாடுகளின் உதவியைக் கோருகின்றது ஸ்ரீலங்கா

கொழும்பு, நவம்பர் 17

மேற்கு ஆசியத்துறைமுகம் ஒன்றில் இருந்து பத்து தொன் ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருள்களுடன் வடபகுதி நோக்கி வந்து கொண்டிருக்கும் கப்பலைப் பிடிப்பதற்கு இந்து சமுத்திரத்தில் உள்ள நாடுகளின் ஒத்துழைப்பை இலங்கை அரசு கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து வெளியாகும் 'ஈவினிங் ஒப்சேர்வர்' மாலைத் தினசரி இச்செய்தியை வெளியிட்டிருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்துள்ளது.

இக்கப்பல் விடுதலைப் புலிகளுக்கு இவ்வாயுதங்களைக் கொண்டு வருவதாக கூறப் படுகிறது என்று இந்திய வானொலி தெரிவித்தது.

இந்த ஆயுதக் கப்பல் பற்றி இலங்கையின் நட்பு நாடு ஒன்றின் புலனாய்வு அமைப்பே துப்புக் கொடுத்ததாகவும் ''ஈவினிங் ஒப்சேவர்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நட்பு நாட்டின் பெயரை அப்பத்திரிகை வெளியிடவில்லை.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை மீள ஆரம்பிக்க அரசு ஆர்வம்!

### அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தகவல்

கொழும்பு, நவ. 17

இடை நிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க அரசு ஆர்வத்துடன் இருக்கிறது.

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தலைமையிலான முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம் செய்திருக்கிறார்களா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில் —

''அவ்வாறு கூறிவிட முடியாது.புதிய ஜனாதிபதி பதவி ஏற்றதை கௌரவிப்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம். எனினும் நிலைமையை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

''யுத்த நிறுத்தப் பிரகடனம் குறித்து அரசுக்கு உத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொலைச் சந்தேகநபரான ஏ.எஸ்.பிக்கு பிணைமறுப்பு

ஹோகந்தற படுகொலை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வாதுவைப் பொலிஸின் முன்னாள் பொறுப்பதிகாரியும் உதவி பொலீஸ் அதிகாரியுமான சுமித் எதிரிசிங்காவை பிணையில் விடக்கோரும் மனுவை கொழும்பு பிரதம நீதிவான் சம்பா புத்திபால நேற்று நிராகரித்தார்.

கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் சந்தேக நபரை பிணையில் விடுவிக்கும் அதிகாரம் தனக்கு கிடையாது என்றும் —

பிணைகோரும் மனுவை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறும் நீதிவான் தெரிவித்தார்.

சந்தேகநபரை இம்மாதம் 30 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-எ)

### முச்சந்தி முரளி



ஆணைக்குழு வருகுதாம்...! கவுன்மேந்துல சேர்ந்தாலும் எவரும் தப்ப ஏலாது கண்டியலோ......!!

## மலையகப் பகுதியில் தமிழ் ஆயுதப்படை!

### புலிகள் ஏற்பாட்டில் உருவாகியதாம்

கொழும்பு, நவ. 17

மலையகப் பகுதியில் மலையக விடுதலை முன்னணி என்ற பெயரில் புதிய தமிழ் கெரில்லா இயக்கம் ஒன்று ருஉவாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்புப் பகுதியினரை மேற்கோள் காட்டி 'திவயின' சிங்கள நாளிதழ் இசசெய்தியை வெளியிட்டிருக்கிறது.

மேற்படி அமைப்பைச் சேர்ந்த — ஆயுதப் பயிற்சி பெற்ற — ஒன்பது பேரை நுவரெலிய விசேட பொலீஸ் படையினர் கைது செய்துள்ளதாகவும்—

அவர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மலையகத் தோட்டப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரகத் துப்பாக்கிகள் இரண்டு மற்றும் குண்டுகள், கைத்துப்பாக்கிகள், தோட்டாக்கள், மகஸின்கள், சயனைட் குப்பிகள் என்பன பொலீஸாரால் கைப்பற்

(3 ஆம் பக்கம் பார்க்க)



சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க புதிய ஜனாதிபதியாக கடந்த சனியன்று பதவியேற்ற பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போது எடுக்கப்பட்ட படம். பின்னால் முப்படைத் தளபதிகளும் பொலீஸ் மா அதிபரும் நிற்கின்றனர்.

## தொண்டமான் மீது லஞ்ச விசாரணை!

கொழும்பு, நவ. 17

''இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் ஐ. தே. க. அரசின் அமைச்சராக இருந்த சமயம் அவரது குடும்ப உறுப்பினர்கள் கோடிக் கணக்கான ரூபா மோசடிச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுவது குறித்து விசாரணை செய்யப்படுமா?'' — என்று செய்தியாளர் [illegible] தற்கு—

அமைச்சர் [illegible] பிக்களின் மீதான ஊழல் மற்றும் லஞ்சக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சபாநாயகரின் அனுமதி பெறாமலேயே லஞ்சத் திணைக்களம் இனி மேல் விசாரணை நடத்த முடியும் என அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பதிலளித்தார்.

லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்ய ஆணைக்குழு [illegible] குறித்து தகவல் [illegible] குறிப்பிட்டார்.

''ஊழல் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய ஒருவரை அமைச்சராக நியமித்தது பொருத்தமானதா? என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு—

''அமைச்சர் மீது சந்தேகம் உண்டு எனினும் அது நிரூபிக்கப்படவில்லை. சட்டத்தின் கீழ் குற்றம் நிரூபிக்கப் [illegible] வரை எவரும் சுத்தவாளியே'' என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' கட்டட வேலை நிறுத்தம்

இரணவிலவில் கட்டப்படும் ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' ஒலிபரப்பு நிலையம் குறித்து ஆராய மூன்று அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்தக்குழுவின் விசாரணை முடியும் வரை ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' அமைப்பின் நிர்மாண வேலைகள் நிறுத்தப் பட்டுள்ளன.

அமைச்சர் ஜி. எல். பீரிஸ் நேற்று செய்தியாளர்கள் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சர் குழுவில் லக்ஷ்மன் கதிர்காமர், லக்ஷ்மன் ஜெயக்கொடி, சி. வி. குணரத்னா ஆகியவர்கள் அங்கம் வகிக்கின்றனர். (ஒ-உ-எ-6)

## தேசிய அபிவிருத்தி சபை அமைப்பதற்கு அரசு முடிவு

இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரக் கொள்கையைத் தயாரிப்பதற்கு தேசிய அபிவிருத்தி சபை ஒன்றை அமைக்க அமைச்சரவைமுடிவு செய்துள்ளது.

கடற்றொழில், கைத்தொழில் போன்ற எட்டு விடயங்களுக்காக தனித் தனியாக எட்டு துணைச் சபைகளை தேசிய அபிவிருத்தி சபை கொண்டிருக்கும்.

அபிவிருத்திச் சபைக்கு — நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகாவே தலைமை வகிப்பார்.

வறுமையை ஒழிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி இயக்கத்துக்காகவும் துணைச் சபை ஒன்று நியமிக்கப்பட இருக்கிறது.

தேசிய அபிவிருத்தி சபையில் அரசாங்க, தனியார் துறை அதிகாரிகளும் தொழிற் சங்கங்களும் மற்றும் அவை போன்ற இயக்கங்களின் பிரதிநிதிகளும் இடம்பெறுவர்.

## லஞ்ச ஆணைக்குழுவின் விசாரணை 15இல் ஆரம்பம்

லஞ்சம், ஊழல் தொடர்பான நிரந்தர ஆணைக்குழு அடுத்த மாதம் 15 ஆம் திகதியில் இருந்து விசாரணைகளை ஆரம்பிக்கும்.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் டி. ஏ. டி.விஜேசுந்தர இருப்பார்.

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர் சிவா செல்லையா, ஓய்வுபெற்ற கணக்காளர் நாயகம் பி. எம். டபிள்யு. விஜேசூரியா ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

இத்தகவல்களை நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் செய்தியாளர்களிடம் நேற்று வெளியிட்டார்.

## வல்வைக் கடலில் தாக்கு! மீனவரைக் காணவில்லை

### மன்னாரிலும் கடற்படை அட்டகாசம்

வல்வெட்டித்துறை, நவ.17

வல்வெட்டித்துறை கடற் பகுதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் கடற் படையினர் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

படையினரின் தாக்குதலினால் மீனவர் ஒருவர் காணாமற் போய்விட்டார். மற்றொருவர் கடலில் குதித்து நீந்தி கரை சேர்ந்தார்.

இந்த மீனவர்கள் சென்ற வள்ளம் சிதைந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

ஆதிகோயிலடி வாசியான கந்தையா சக்திவேல் (47 வயது) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே காணாமற் போனவர் ஆவார்.

இதேவேளை, மன்னார் அரிப்பு கடற்பரப்பிலும் நேற்று கடற்படையினர் குடியிருப்புப் பகுதிகள்மீது தாக்குதல்களை நடத்தினர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. ஆதரவாளர்கள் பெற்றோல் குண்டுத் தாக்கு!

### ஐ. ஐ. தே. மு. பிரமுகர் காயம்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் (லலித் பிரிவு) கட்டான தொகுதி அமைப்பாளரான சட்டத்தரணி நந்தன மெண்டிஸ் பயணம் செய்த கார் மீது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் கடந்த ஞாயிறு கற்களை வீசியும் குண்டை வீசியும் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹல்கஸ்முல்ல என்ற இடத்தில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் நந்தன மெண்டிஸ் காயமடைந்ததாகவும் வாகனம் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்தாக்குதலில் 50 பேர் கலந்து கொண்டனர் என்றும் பெற்றோல் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்றும் கூறப்பட்டது. (ஒ-எ)

## தப்பி ஓடிய சிப்பாய் அரசியல்வாதியின் வீட்டில்!

கொழும்பு, நவ. 17

இராணுவ சேவையில் இருந்து ஒன்றரை வருடத்துக்கு முன் தப்பி ஓடிய சிப்பாய் ஒருவர் பிரபல அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கண்டி கங்கொல்ல என்ற இடத்தில் இவர் கைது செய்யப்படும்போது அவரிடம் இருந்து தன்னியக்க துப்பாக்கி ஒன்றும், 88 ரவைகளும் கைப்பற்றப் பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வான் கோழிச் சேவல் விற்பனைக்குண்டு. ஸ்ரேசன் றோட், இல. 9, கந்தையா லேன், சுன்னாகம்.

(7809)

### காணி விற்பனைக்கு

யாழ். வண். மேற்கு சிவப்பிரகாசம் வீதியில் களஞ்சிய வசதி, வாகனங்கள் நிறுத்தி வைக்கும் நிரந்தர கொட்டகை வசதி, தனிக்கிணறு இரண்டுடன் அமைந்த எட்டுப் பரப்புக்காணி விற்பனைக்குண்டு. காணியைப் பிரித்துக் கொடுக்கலாம். தொடர்பு: திருமதி லிங்கா துரைராசா, சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, இல. 19, பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர்.

(சி-9682)

### தவறிவிட்டது

15-11-94 அன்று நாச்சிமார் கோயிலடியில் வெ. வடிவேலு, வெ. கதிரவேலு ஆகிய இரட்டைப் பெயர் கொண்ட இல. 382170164 V தேசிய அடையாள அட்டையும், ஒரு தொகைப் பணமும் அடங்கிய சிறிய கைப்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தோர் இல. 29, அச்சுக்கூட லேன், கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(33786)

### மணமகன் தேவை

இந்து, சைவ போசனம், வயது 29, உயரம் 5' நட்சத்திரம் சதயம், செவ்வாய் தோஷமற்ற பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியைக்கு, ஆசிரியர் அல்லது அரச துறையில் தொழில்புரியும் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். சகல விவரங்களுடன் தொடர்பு: இல. 715, மே/பா உதயன் பணிமனை யாழ்ப்பாணம்.

[33785]

### A/L பௌதிகவியல் 95/96

தனிப்பட்ட வகுப்பாக பௌதிகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளோடு கற்பிக்கப்படும். பல ஆண்டு அனுபவத்தோடு கற்பிக்கும் ஆசிரியர் R. பாலசுப்பிரமணியம் B. Sc. Dip-in-Ed., 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(33755)

## சித்தார்த்தன் கோரிக்கை

மணிலா, நவ. 17 விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள போர் நிறுத்தத்துக்கு அரசு முறைப்படி பதில் அளிக்க வேண்டும் என்று புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (ஐ-3)

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

நல்ல உடல்வாகுள்ள தயார் நிலையிலுள்ள, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் முறைமாற்று அடிப்படையில் வேலைசெய்வதற்கு தேவை.

| | |
|---|---|
| உயரம்: | 5' 4'' மும் அதற்கு மேலும் |
| வயது: | 25 — 45 |
| கல்வித்தராதரம்: | குறைந்தது 8ஆம் வகுப்பு |
| அனுபவம்: | மேலதிக தகைமையாக கருதப்படும். |

தயவுசெய்து சொந்தக் கையெழுத்தில் முழுமையான சுயவிவரங்களுடன் 23 - 11 - 1994 காலை 11-00 மணிக்கு நேரில் வரவும்.

**யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்,**
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி-9689)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சின்னையா இராசையா**
(ஓய்வு பெற்ற பிரதிப் பிரதேச முகாமையாளர் அரச மரக் கூட்டுத்தாபனம்)

மலர்வு: 21 — 08 — 1928
உதிர்வு: 09 — 12 — 1992

திதி: 17 — 11 — 1994

பாசத்தின் உறைவிடமே பண்பு நிறைந்த —
பேருருவே
வாழ வழி காட்டி வாழ் வாங்கு வாழ விட்டு
நேசத்தை காட்டி நிர்க்கதிக்குள் ஆக்கி விட்டு
மாசற்ற மனமுடையோய் மறைந்த தேன் —
மாமணியே
நீரில்லா உலகினிலே நிம்மதியில்லையப்பா
சிரித்த உம் முகம் காண சிந்தை துடிக்குதப்பா
கார்த்திகை தீபமதில் காற்றாகிப் போனீரே
இறப்பிலும் இறைவனிடம் நீர் இணைந்திடவே
எல்லாம் வல்ல வெவ்வில் முருகனை —
இறைஞ்சுகின்றோம்.

திருமதி இராசையா ராணி
(மனைவி)

ராணிக் கொட்,
7ஆம் கட்டை
சங்கானை.

(33767)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 08 — 1979
மறைவு: 04 — 10 — 1994

**அமரர் நாகராஜா சிவசங்கர்**

முந்தித் தவங் கிடந்து முன்னூறு நாள் சுமந்து
அந்தி பகல் நொந்து இறைவனை வந்தித்து
சிந்தித்துச் சீராய் சிறப்பாய் பெற்றெடுத்தோம்
காலை இளம்பருதி போல் வளரக் கனவு கண்டோம்
கனவெல்லாம் கனவாக காலையில் மறைந்ததென்ன
ஆராரோ பாடியவாய் ஆறமுதல் எம்முயிரே
ஆராரைத் தேடி நீயும் விண்ணுலகு சென்றனையோ
சீராக வளர்த்துவிட சிரஞ்சீவி வாழவில்லை
சீர்கெட்டு நிற்கின்றோம் தீரவில்லை எம் துயரம்
என்மகனே! என்தம்பி! என்னண்ணா! என்றே நாம்
துன்புறும் துயரமது என்றுதான் தீர்ந்திடுமோ.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

87, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(33776)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18 — 11 — 1936
உதிர்வு: 04 — 12 — 1987

**அமரர் இ. பஞ்சாட்சரம்**
அருள்முருகன் நகைமாளிகை,
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

திதி: 17 — 11 — 1994

அன்பின் உறைவிடமாய், அமைதியின் அணிகலனாய், பாசத்தின் பிறப்பிடமாய் எங்கள் இதயமெல்லாம் நிறைந்திருக்கும் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் கண்ணீர் மல்கி பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பெருங்குளம் பிள்ளையார்
கோயில் வீதி,
சாவகச்சேரி.

(33778)

## 31ஆம்- நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 12 — 08 — 1935
மறைவு: 18 — 10 — 1994

அமரர்
**மயில்வாகனம் இளையதம்பி**
(முன்னாள் தபாலதிபர்)

எங்கள் குலதெய்வத்தின் மறைவின் போது, எங்கள் துயரில் பங்கு பற்றியோருக்கும் பல வழிகளில் ஒத்தாசைகள் புரிந்த சக நண்பர்களுக்கும் அயலவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று 17 - 11 - 1994 இல் நடைபெற இருக்கும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
வேண்டி நிற்கும்:
அன்பு மனைவி, சகோதரர்கள்,
சகோதரிகள்.

நாவலர் [illegible] வீதி,
கோப்பாய்.

[illegible]

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
### மானிப்பாய்
### (மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம்)

வரியிறுப்பாளருக்கு:

1987ஆம் ஆண்டின் 15ஆவது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 41 ஆவது பிரிவின் கீழ் 1995ஆம் ஆண்டிற்கான

### ஆதனவரி பற்றிய அறிவித்தல் – 1995

1995ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின்படி அறவிடப்படும். தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர்வரும் ஆண்டும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குமுரிய வரித் தொகையை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும், 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31ஆம், ஏப்ரல் 30ஆம், ஜுலை 31ஆம், ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1ஆம் கந்தாய வரி மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பும்,
2ஆம் கந்தாய வரி ஜூன் 30ஆம் திகதிக்கு முன்பும்,
3ஆம் கந்தாய வரி செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன்பும்,

4ஆம் கந்தாய வரி டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும். செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15%மும், வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20%மும் பற்றாணைச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் பணத்தை செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்றார்கள்.

மேலும் 1994ஆம் ஆண்டு முடிய மின்சார வரி நிலுவைகளையும், வியாபார உரிமக் கட்டணங்கள் மற்றும் வண்டி, துவிச்சக்கரவண்டி வரி என்பனவற்றையும் நிலுவையின்றி செலுத்துமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

து. வைத்திலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய். 16-11-1994.

(சி-9625)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய்
## 1995ஆம் ஆண்டு சந்தைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 1994 - 12 - 07 ஆம் திகதி காலை 10-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை பிரதேசசபையின் உப அலுவலகங்களில், இதன் கீழ் உள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டவாறு கேள்வி வைப்புப் பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணத்தையும் செலுத்துவதன் மூலம் 1994 - 12 - 06 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து, மூலப்பிரதியை "விசேட ஆணையாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை "உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர், எழுதப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 1994 - 12 - 07 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தலைமைப் பணியகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1994 - 12 - 07 ஆம் திகதி காலை 11-00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும், குடும்ப அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

து. வைத்திலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமை செயலகம்,
நகரமண்டபம்,
மானிப்பாய்.
1994 - 11 - 16

### அட்டவணை

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டினம்: | | | | | |
| 1. | ஆட்டிறைச்சிக்கடை (சந்தை) | 250/- | 1,000/- | 100/- | 27,610/- |
| 2. | மாட்டிறைச்சிக்கடை இல. (1) (சந்தை) | 250/- | 1,000/- | 100/- | 55,050/- |
| 3. | மாட்டிறைச்சிக்கடை இல. (2) (சந்தை) | 250/- | 1,000/- | 100/- | 55,050/- |
| 4. | மானிப்பாய் மத்திய சந்தை | — | 1,000/- | 100/- | 66,110/- |
| 5. | கட்டுடை சந்தை | — | 300/- | 100/- | 500/- |
| மானிப்பாய் கிராமம்: | | | | | |
| 1. | சாவற்கட்டு சந்தை ஆனைக்கோட்டை | — | 1,000/- | 100/- | 2,420/- |
| 2. | நவாலி பிரசாத் சந்தை | — | 1,000/- | 100/- | 12,650/- |
| 3. | காக்கைதீவுச் சந்தை | — | 1,000/- | 100/- | 3,300/- |
| 4. | மாட்டிறைச்சிக்கடை நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1,000/- | 100/- | 46,750/- |
| 5. | ஆட்டிறைச்சிக்கடை நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1,000/- | 100/- | 11,110/- |
| 6. | ஆட்டிறைச்சிக்கடை சாவற்கட்டுச்சந்தை | 250/- | 1,000/- | 100/- | 11,000/- |
| 7. | கருவாட்டுக்கடை சாவற்கட்டுச்சந்தை | 100/- | 500/- | 100/- | 1,155/- |
| பண்டத்தரிப்பு கிராமம்: | | | | | |
| 1. | மாசியப்பிட்டி சந்தை மாசியப்பிட்டி | — | 1,000/- | 100/- | 12,100/- |
| 2. | மாட்டிறைச்சிக்கடை மாசியப்பிட்டி சந்தை | 100/- | 1,000/- | 100/- | 15,400/- |
| 3. | ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 1,000/- | 100/- | 10,000/- |

[சி-9626]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மறக்க வேண்டிய அதிகாரப் பரவல்

சமஷ்டி அரசமைப்பு முறையை முன்னரே நாட்டில் அமுல் நடத்தியிருப்பின் தற்போதைய யுத்தத்தைத் தவிர்த்திருக்க முடியும். இவ்வாறு கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ''சண்டே ஐலண்ட்''டில் வெளியான கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது கூட, விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் அடிப்படையாக சமஷ்டி அரசமைப்பு இருக்க முடியும் என்று கட்டுரையாளர் ஹெகான் பெரேரா ஆலோசனை கூறியுள்ளார்.

கட்டுரையாளர் தென்னிலங்கையின் இளந் தலைமுறை புத்திஜீவிகளில் ஒருவர். இவரைப் போல, நாட்டின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டியே அடிப்படைத் தீர்வாக அமைய வேண்டும். அதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு வழி பிறக்கும் என்பது தெற்கின் இளந்தலைமுறைப் புத்திஜீவிகள் பலரின் கருத்தாக உள்ளது.

ஆனால் தெற்கின் அரசியல் வாதிகளும், இனவாதிகளும் இதனைப் புரிந்து கொள்வதாக இல்லை. இந்த வகையினரே, சமஷ்டி என்றால் நாட்டைப் பிரிப்பது, சிங்கள தேசத்தைத் தமிழர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பது என்ற தப்பான கருத்தைச் சிங்களப் பொது மக்களுக்குப் பரப்பி வந்தார்கள்.

1957ஆம் ஆண்டில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் முழுமையான சமஷ்டி வடிவமாக இருக்கவில்லை. தமிழர்களுக்கு அரைவாசிக்கும் குறைவான தன்னாட்சி உரிமையை மட்டுமே வழங்குவதாக இருந்தது.

பண்டா – செல்வா ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலே இப்போதைய யுத்தத்தைத் தவிர்த்திருக்க முடியும். அதன் பின்னர் படிப்படியாக சமஷ்டி முறைக்கு வந்திருப்பின் நாட்டில் இரத்த ஆறு இந்தளவு ஓடியதைத் தவிர்த்திருக்கலாம்.

ஆனால் இந்த உண்மை இதுவரை காலமும் சிங்கள மக்களுக்கு மறைக்கப்பட்டு வந்தது. தெற்கின் அரசியல் தலைவர்கள் தமது பிழைப்புக்காக, நாட்டின் நலனை விலைபேசிச் சீரழித்துள்ளார்கள்.

முப்பத்தேழு வருடங்களுக்குப் பின்னர் இனப்பிரச்சினைக்குரிய நியாயமான தீர்வின் ஆகக் குறைந்த அடிப்படை, சமஷ்டி அரசமைப்பின் கீழ் தமிழ் மக்களுக்கு தன்னாட்சி உரிமையாகவே இருக்க முடியும். ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பரவல் என்ற நிலைப்பாடு முற்றாக மறக்கப்பட வேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறையும், விசுவாசமும் உள்ளவராக ஜனாதிபதி சந்திரிகா காணப்படுகிறார். யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வு ஒன்றை கண்டாக வேண்டும் என்பதற்காக அவர் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பித்துமுள்ளார். ஆனால் தாம் மனதில் வைத்திருக்கும் தீர்வுத் திட்டம் என்ன என்பதை இன்னும் வெளிப்படுத்தவில்லை.

சமஷ்டி அரசமைப்பின் கீழ் தமிழர்களுக்குத் தன்னாட்சி என்ற அடிப்படையில் இருந்தே தீர்வுத் திட்டம் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்பதனை, அவர் மறந்தால் தமது தந்தையார் போலவே தீர்வு முயற்சியில் தோல்வி காண நேரிடலாம்.

அதற்கு இடம் கொடாமல், சமஷ்டி அரசமைப்பின் அடிப்படையிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும். அரசுக்குள்ள பிரசார சாதனங்களை அதற்குப் பயன்படுத்தவேண்டும். திடீரெனத் திட்டத்தைக் கூறி எதிர்ப்பைச் சம்பாதிப்பதை விட, மெது மெதுவாக சமஷ்டிக் கருத்தைச் சிங்கள மக்களிடம் புகுத்த வேண்டும். அடிமேல் அடி அடித்துத் தான் அம்மியை நகர்த்தலாம்.

# தீர்வை எதிர்த்ததன் மூலம் ஐ. தே. க. இனவெறிக் கட்சியாக மாறி விட்டது

## 'ஐலண்ட்' ஆசிரிய தலையங்கம்

கொழும்பு, நவ. 17

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மாற்று யோசனை எதனையும் முன்வைக்காமல் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சமாதானக் கொள்கையை எதிர்த்ததன் மூலம் ஒரு இனவெறி பிடித்த கட்சியாக ஐ. தே. க. தோன்றியுள்ளது.

'த ஐலண்ட்' ஆங்கில நாளிதழின் (15-11-1994) ஆசிரியர் தலையங்கத்தில் முன் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கட்சி அரசியல் நாட்டை மேலும் அதலபாதாளத்தில் தள்ளியுள்ளது.

எமது வாழ்வை ஒழுங்கான தாக மாற்றும் முதிர்ச்சிப் போக்கை நாம் கடைப்பிடிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

விமரிசனம் என்ற பேரில் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் தேவையற்ற விதத்தில் வாதம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அரசியல் அபிலாஷைகளை பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் அதிகார வெறி எம்மை பேரழிவுக்கே கொண்டு சென்று விடும். கடந்த 17ஆண்டுகளில் இக் கசப்பான அனுபவத்தை நாம் பெற்றுள்ளோம்.

விட்டுக்கொடுத்தல், சகிப்புத் தன்மை, பொறுமை ஆகியவற்றை நாம் படிக்கவில்லை என்றால், ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது ஐக்கிய தேசியக்கட்சி செய்த முட்டாள் தனமான தவறுகளைத் தான் நாம் தொடர்ந்து விடுவோம்.

ஐக்கியதேசியக்கட்சி விட்ட தவறுகளின் பலன் அதனை இனவெறிக் கட்சியாக காட்டியுள்ளது.

மக்களுக்குத் தனது முட்டாள் தனமான பின்வரும் நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டதன் மூலம், அது தனது நிலைமையை மேலும் மோசமாக்கியது:-

''விடுதலைப் புலிகளிடம் நாட்டை ஒப்படைக்கவேண்டுமானால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு வாக்களியுங்கள்''— என்றது ஐ. தே. க.

நாடு அதனையே செய்துள்ளது.

ஒரு காலத்தில் முதிர்ச்சியும் உறுதியும் படைத்த கட்சியாக விளங்கிய ஐக்கியதேசியக் கட்சி இன்று காலூன்றி நிற்க முடியாத நிலையில் உள்ளது.

இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ள ஓரேவழி மக்களின் மனப்பான்மைக்கு ஏற்ப உண்மையான, ஆக்கபூர்வமான பங்கை வகிப்பதேயாகும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து அதனுடைய அபிலாஷைகளை நிறைவேற்ற ஐக்கிய தேசியக் கட்சி செயல்படவேண்டும்.

பொ. ஐ. மு அரசின் அபிலாஷை சுத்தமான, நாகரீக சமூகம் ஒன்றை உருவாக்குவதேயாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது. (இ-எ)

# எனது தலைமையின் கீழ் ஐ.தே. கவில் இனவாதத்துக்கு இடமேயில்லை!

## ரணில் கூறுகிறார்

கொழும்பு, நவ. 17

''எனது தலைமைத்துவத்தின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இனவாதத்துக்கு இடமில்லை''.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான திரு ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் பேசியபோதே அவர் இப்படிக் கூறினார்.

ஐ. தே. கட்சியிடம் இனவாதம் இல்லை. தமிழை உத்தியோக மொழியாக்கியதும், தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜா உரிமை வழங்கியதும் எமது கட்சி தான்.

முன்னர் தொண்டமான் எங்களுடன் இருந்தபோது எமது அரசை ஜே. ஆர்.— தொண்டா அரசு என்றும், பிரேமதாஸா — தொண்டமான் அரசு என்றும், விஜேதுங்கா — தொண்டமான் அரசு என்றும் எதிர்க் கட்சியினர் கூறி வந்ததை நான் நினைவுபடுத்துகிறேன்.

— இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கா மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## குண்டுவெடிப்பு விசாரணை:

# லண்டன் சென்றிருந்த அதிகாரிகள் திரும்பினர்

கொழும்பு, நவ. 17

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட தடயப்பொருள்களுடன் ஸ்கொட்லண்ட்யார்ட்டுக்குச் சென்றிருந்த இரு இரகசியப் பொலிஸ் அதிகாரிகளும் லண்டனில் இருந்து கொழும்பு திரும்பி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸ் நிபுணர்களின் அறிக்கை கிடைத்த பின்னர் தான் காமினி திஸாநாயக்காவின் கொலை பற்றி எந்த கோணத்தில் விசாரணையைத் தொடர்ந்து நடத்துவது என்பது தீர்மானிக்கப்படும் என்று குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்கொட்லண்யார்ட் நிபுணர்களின் அறிக்கை விரைவில் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை — இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணைக்குக் கூட்டிச் செல்லப்பட்ட அரசு மருத்துவ அதிகாரி ஒருவர், விசாரணையின் பின்னர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

# ஜனாதிபதி மாளிகையை சந்திரிகா பயன்படுத்தார்!

கொழும்பு, நவ. 17

ஜனாதிபதி பதவியை சந்திரிகா குமாரதுங்கா ஏற்றுக் கொண்டுள்ளபோதிலும்—

ஜனாதிபதி மாளிகையை தமது வாசஸ் தலமாக அவர் பயன்படுத்தமாட்டார் என ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமரான தமது தாயாரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலமான அலரி மாளிகையையே ஜனாதிபதி சந்திரிகாவும் பயன்படுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க போவதாக சந்திரிகா கூறி வருவது தெரிந்ததே. (உ-10)

# இடைக்கால பட்ஜெட் செவ்வாய் சமர்ப்பிப்பு

## நான்கு நாட்களுக்கு விவாதம்

கொழும்பு, நவ. 17

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு சமர்ப்பிக்கவிருக்கும் இடைக்காலக் கணக்கறிக்கை மீதான விவாதம் நான்கு தினங்கள் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசின் பொருளாதார போக்கைக் கோடிகாட்டும் குட்டி வரவு— செலவுத் திட்டமாக இக்கணக்கறிக்கை அமையலாம் என்று அரச அதிகாரிகள் கருதுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஐ-எ-6)

# இன்று நடைபெறவுள்ள சிரமதானங்கள், கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 17

மாவீரர் நாளின் முன்னோடியான மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி இன்று வியாழக்கிழமை சிரமதானங்கள் மற்றும் எழுச்சிக் கூட்டங்கள் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

### சிரமதான நிகழ்வுகள்

★ யாழ். முலவைச் சந்தி அருள்மாதா ச. ச. நிலையம் முன்பாக உள்ள மைதானம், கழிவு வாய்க்கால் துப்புரவு. 250யார் தூர போக்குவரத்து பாதை வசதி செய்தல்.

★ பளை, முல்லையடி ச. ச. நிலைய சூழலில் சுகாதாரம் பேணல்.

★ தீவக கோட்டம்— யாழ் ஸ்ரீபன் குடியிருப்பிலும், முஸ்லிம் பகுதியிலும், நவாலி குடியிருப்பிலும் துப்புரவுப் பணி மற்றும் வடிகால் செப்பனிடல்.

### எழுச்சிக் கூட்டங்கள்

இன்று இரவு மாவீரர் எழுச்சிவார எழுச்சிக் கூட்டங்கள் மற்றும்வீதி நாடகங்கள் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு;-

★ யாழ்.வட்டம்—ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் ச. ச. நிலையம், வண்ணார்பண்ணை வள்ளுவன் ச. ச. நிலையம்.

★ கோப்பாய் வட்டம்— நீர்வேலி திலீபன் ச. ச. நிலையம், இருபாலை குத்துனி முகாம்.

★ நல்லூர் வட்டம்— திருநெல்வேலி வாலையம்மன் ச. ச. நிலையம், கொண்டலடி ச. ச. நிலையம்.

சண்டிலிப்பாய் வட்டம்— சாவற்காடு மகாத்மா ச. ச நிலையம், மானிப்பாய் மாவீரர் முகாம்.

★ சங்கானை வட்டம்— வட்டுக்கோட்டை கலைநகர் நேருஜி ச. ச. நிலையம், சித்தன்கேணி நாமகள் ச. ச. நிலையம்.

★ உடுவில் வட்டம்— இணுவில் கலாஜோதி ச. ச. நிலையம், பருத்தியடைப்பு பிள்ளையார் கோயிலடி.

★ உடுவில்— தெல்லிப்பளை வட்டம்— கலைமகள் ச. ச. நிலையம், மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் கோயிலடி.

★ பளை வட்டம்— புலோப்பளை அரசன் குடியிருப்பு மைதானம்.

★ கொடிகாமம் வட்டம்— நாவலர் ச. ச. நிலையம்.

★ கைதடி வட்டம்— கைதடி மேற்கு சேதுகாவலர் பாடசாலை

★ பருத்தித்துறை வட்டம்— அல்வாய் மேற்கு கரும்புலிகள் குடியிருப்பு.

★ உடுப்பிட்டி வட்டம்— இமையாணன் அறிவாலயம் நிலையம்.

★ தீவகக் கோட்டம்— யாழ். ஸ்ரீபன் குடியிருப்பு, யாழ். முஸ்லிம் பகுதி. (ஐ)

# உன்னத இலட்சியத்துக்காக உயிர் ஈந்தவர்களைப் போற்றிடுவோம்

மாவீரர்நாள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பு.

இழந்த எமது தாய் நாட்டின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரை ஈர்ந்து இந்த மண்ணுக்கே உரமாகிப் போன உத்தமர்கள் தான் இந்த மாவீரர்கள்.

எமது மக்களுக்காகவும் — மக்களின் சுபீட்சமான வாழ்வுக்காகவும் —

எமது எதிர்காலச் சந்ததி இந்த மண்ணில் தலை நிமிர்ந்து உரிமையுடன் வாழ வேண்டுமென்பதற்காகவும் — தங்களை முழுமையாக அர்ப்பணித்துப் போராடியவர்கள் தான் மாவீரர்கள்.

இவர்கள் தாங்கள் பிறந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தங்களின் வாழ்வை விட மக்களின் வாழ்வை பெரிதாக மதித்தார்கள், தன்மானத்துடன் எமது தாய்மொழியான தமிழைப் பாதுகாக்கப் புறப்பட்டார்கள். இவர்களின் செங்குருதியினால் இந்த மண் சிவந்தது. விடுதலைப் புரட்சி இந்த மண்ணில் சுடர் விட்டு எழுந்தது.

எமது நீண்ட வரலாற்றை நிலைநிறுத்த நடைபெறுகின்ற வரலாற்றுப் போரை வரலாற்று நாயகனான எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழி நடத்திச் செல்கின்றார். இந்த வழி நடத்தலில் உறுதியாக நின்று, உன்னத இலட்சியத்தை நோக்கி எதிரியோடு போர் புரிந்து எமது தாயகத்தின், பெரும் பகுதியை மீட்டெடுப்பதற்கு உறுதுணையாக நின்ற எமது வீரர்களை போற்றிப் பணிவது எமது தலையாய கடமையாகும்.

### தாய் நாட்டின் தேசிய நாள்

தமிழீழ மாவீரர் நாள் எமது தாய் நாட்டின் தேசிய நாளாகும். இந் நாள் தமிழீழ மக்களினால் போற்றப்படும் புனித நாளாகும்.

இந்நாளை முன்னிட்டு நவம்பர் 15 ஆம் நாள் தொடக்கம் 20 ஆம் நாள் வரை மாவீரர் எழுச்சி வாரமாகும். இந் நாட்களில் பாடசாலை மாணவர்கள் மாவீரர் நினைவாக அலங்கரித்தல், சிரமதானங்களில் ஈடுபடுதல், மரம் நடுதல் போன்ற நிகழ்வுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள்.

### பாடசாலைகளில்

21 ஆம் நாள் காலை 8-30 மணிக்கு பாடசாலைகளில் தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் மாவீரர் வாரம் ஆரம்பமாகும்.

ஒவ்வொரு நாள் காலையிலும் மலரஞ்சலி செலுத்தி 30 நிமிட நேர மாவீரர் நினைவு நிகழ்வுகளும் நடைபெறும்.

27 ஆம் நாள் வரையிலான ஏழுநாட்களில் ஒரு நாளில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் தங்கள் பாடசாலைகளில் முழு அளவிலான சிறப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி செய்வதுடன் கோட்ட மட்டத்தில் நடத்தப்படும் நிகழ்விலும் கலந்து கொள்வார்கள்.

தமிழீழ மாவீரர் நாளான 27 ஆம் நாளன்று மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் நிகழ்வில் அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டு எமது விடிவிற்காக தங்களையே ஆகுதியாக்கிய, எமது நெஞ்சமெல்லாம் நினைந்து வாழுகின்ற, இலட்சியத்தின் [illegible] மாவீரர்களை நினைவில் [illegible] அவர்களை போற்றிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் குரல் வானொலியில்

### 17 — 11 — 1994 வியாழன் இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — சித்த மருத்துவ குறிப்புகள் — சென்ற வார தொடர்ச்சி
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் யாழ்.கால் நடை. வைத்தியசாலை அத்தியட்சகர் திரு. தங்கராஜா அவர்களுடனான செவ்வி
★ 8 - 30 — செய்திகள்
★ 8-40 — ஏட்டிலிருந்து ''உலக உலா'' என்ற சஞ்சிகையிலிருந்து ''அடிமைகள் நிறுவிய குடியரசின் அவலங்கள்'' எனும் கட்டுரை
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### 18 — 11 — 1994 வெள்ளி காலை

★ 7 - 02 — மாவீர வணக்கம்.
★ 7-15 —மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7 - 35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — தாயகப்பாடல்கள்
★ 8-00 —மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

## ஜனாதிபதியிடம் ஆட்சேபம்

கொழும்பு, நவ. 17

அமைச்சர் அமரசிறி தொடங்கொடவிடமிருந்து உள்நாட்டமைச்சு அகற்றப்பட்டு, அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கு வழங்கப்பட்டது குறித்து தென் இலங்கையைச் சேர்ந்த அமைப்புகள் சில ஜனாதிபதி சந்திரிகாவுக்கு முறையிட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ-6)

## தேர்வு மதிப்பீட்டாளர் கூட்டங்கள்

முதனிலைத் தேர்வு பிரதம மதிப்பீட்டாளர்களுக்கான கூட்டம் இன்று வியாழன் பிற்பகல் 2மணிக்கும்—

இளநிலைத் தேர்வு பிரதம மதிப்பீட்டாளர்களுக்கான கூட்டம் எதிர்வரும் திங்கள் பிற்பகல் 2மணிக்கும் நல்லூர் ஸ்தான சி. சி. பாடசாலையில் நடைபெறவுள்ளது சகல கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதம தேர்வாளர்கள் முதன்மைதேர்வாளர்கள், கட்டுப் பாட்டுத் தேர்வாளர்கள் அனைவரையும் மேற்படிகூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

## மாணவருக்கு போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம். நவ.17

வாரிவளவு நல்லியக்கச் சபை காரைநகர் மாணவர் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஜி. சி. ஈ சாதாரண தர மாணவர்களுக்கு நடத்தும் கணித, விஞ்ஞான முன்னோடிப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். நாவலர் ம.ம. வித்தியாலயத்தில் காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது. (ஐ)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

நாளை (வெள்ளி) தமிழீழ நிர்வாக சேவை செயலகத்தில் நடைபெறவிருந்த, கூட்டுறவு சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் பின் போடப்பட்டுள்ளதெனவும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## சிசுவின் சடலம்

உரப்பையினால் சுற்றப்பட்டு கடற்கரை மணலில் புதைக்கப்பட்டிருந்த பெண் சிசுவின் சடலம் அழுகிய நிலையில் நாகர்கோயில் காவல்துறையினரால் மீட்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்குப் பின்னர் சிசுவின் சடலம் ஆஸ்பத்திரி வளவில் புதைக்கப்பட்டது.

இச்சிசுவின் மரணம் தொடர்பாக நாகர்கோயில் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

## இன்று

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் நூலகத்தைச் சண்டிலிப்பாய் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் இன்று வியாழக்கிழமை காலை 8-30 மணிக்குத் திறந்து வைப்பார். வித்தியாலய அதிபர் திரு. அ. நடராசா தலைமையில் இவ் வைபவம் நடைபெறும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 17

சென். ஜோன்ஸ் பழைய மாணவர் அணிக்கும் சென். பற்றிக்ஸ் பழைய மாணவர் அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று மாலை 4 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

### யாழ். பல்கலை மைதானத்தில்

★ காலை 8.30 மணி:- யாழ். மத்திய கல்லூரி எதிர் கனகரத்தினம் ம. ம. வி. (வயது 17)

★ 9.30 மணி:- அத்தியார் இந்து எதிர் மானிப்பாய் (17 வயது)

★ 10.30 மணி;- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் சென். ஹென்றீஸ் (17 வயது)

★ பி. ப. 2.30 மணி:- வட்டு. இந்து எதிர் சிதம்பரா (19 வயது)

### நெல்லியடி ம. ம. வியில்

★ பி. ப. 2. 30 மணி:- சென். ஹென்றீஸ் எதிர் விக்னேஸ்வரா (19 வயது)

★ 3.30 மணி:- சென். சார்ள்ஸ் எதிர் ஹாட்லி (19 வயது)

### மட்டுவில் சந்திரபுர மைதானத்தில்

★ பி. ப. 3. 00 மணி:- உடுப்பிட்டி அ.மெ.பா எதிர் மட்டுவில் சந்திபுர ஸ்கந்த வரோதயா (19 வயது)

### யாழ். இந்துவில்

★ பி. ப. 2. 30 மணி:- அராலி இந்து எதிர் இமையாணன் அ.த.க.பா (17 வயது)

★ 3. 30 மணி:- சென். ஜோசப் எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணா (15 வயது) (உ-20)

## பத்து தொன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆழ்கடலில் இருந்து அடையாளத்தை வெளிப்படுத்தாது விடுதலைப் புலிகளுக்கு இவ் வாயுதங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக சர்வதேசப் புலனாய்வு வட்டாரங்கள் கருதுகின்றன என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் இச்செய்தி குறித்து விழிப்புடன் இருப்பதாகவும்— தேவையான விவரங்கள் கிடைக்கவில்லை என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-எ-6)

## மலையகப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றப்பட்டன என்று 'திவயின' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல லட்சம் ரூபா பணத்தை வழங்கி, இந்த அமைப்பை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே உருவாக்கி விட்டுள்ளதாகவும்—.

இந்த ஏற்பாட்டுக்குப் பொறுப்பாக தமது அரசியல் பிரிவு உறுப்பினர் ஒருவரை நியமித்துள்ளதுடன், இனி தொச்சியில் வத்து மலையக இளைஞர்கள் பலருக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பயிற்சி வழங்கி வருவதாகவும் —

அண்மையில் கைது செய்யப்பட்ட — டிக்கோயாவைச் சேர்ந்த — அருணாசலம் லோகேஸ்வரன் (வயது 33) என்ற நபர் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் 'திவயின' குறிப்பிட்டுள்ளது.

இந்த அமைப்பைச் சேர்ந்த பலர் கொட்டகல, டிக்கோயா ஹற்றன், தலவாக்கல ஆகிய இடங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று 'திவயின' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-9)

## தொண்டாவின் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான் நாடாளுமன்றம் சென்றார்.

அரச தரப்பு முன்வரிசையில் பிரதமருக்கு அடுத்த இரண்டாவது ஆசனம் தொண்டமானுக்கு வழங்கப்பட்டது.

இ.தொ.காவின் ஏனைய எம். பிக்கள் எதிர்க்கட்சி வரிசையிலேயே அமர்ந்திருந்தனர். (உ-எ)

## பெயர் மாற்றம்

2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையில் வசிக்கும் முகம்மது முஸ்தபா ஆகிய நான் இவ்வளவு காலமும் இஸ்லாம் மதத்தை தழுவிய எனது பிள்ளைகளின் பெயரினை 16-11-94 தொடக்கம் சைவ முறைப்படி மாற்றி அமைத்துள்ளேன் என்பதனை அறியத்தருகின்றேன்.

| தற்போதைய பெயர் | | மாற்றியமைத்த பெயர் |
|---|---|---|
| றுமைலா | — | கார்த்திகா |
| ஜெரீனா | — | ஜெசிந்தினி |
| முகமட்சலாம் | — | திபாகர் |
| முகமட்றுமைஸ் | — | பிரதீபன் |

தகவல்:
முஸ்தபா

(8016)

## நில அளவையாளராவதற்கான பயிற்சி

நில அளவையாளராவதற்கான முன்னோடி நில அளவைப் பயிற்சியை தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக்கழகம் வழங்கவுள்ளது. இப் பயிற்சியை பெற விரும்பும் கீழ்க்காணும் தகுதியுடைய ஆண், பெண் இருபாலாரும் 30-11-94ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

1. **கல்வித்தகைமை:**
   அ. க. பொ. த. [உ/த]கணிதம் உட்பட 03 பாடங்களில் சித்தி அல்லது
   ஆ. க. பொ. த.[சா/த] கணிதம்,விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியுடனான தகுதி
2. **வயதெல்லை:**
   29 வயதிற்கு குறைந்தோர்.
3. **பயிற்சிக்காலம்:**
   6மாத கால முன்னோடிப் பயிற்சியில் தகுதி காணப்படுபவர்களுக்கு தொடர்ந்து உயர் நிலையில் 6மாதம் பயிற்சி வழங்கப்பட்டு வேலை வாய்ப்பளிக்கப்படும்.
4. விண்ணப்பதாரர் தமது பூரண சுயவிருப்பத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
5. நேர்காணலுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர்,
தமிழீழ நில அளவையாளர்,
ஒருங்கிணைப்புக் கழகம்,
477, கண்டி வீதி, அரியாலை.
யாழ்ப்பாணம்.

[சி/9690]

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி
## விண்ணப்பம் -1994

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம் நடத்தும் லெப் – கேணல் மதி அவர்களின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக வலி-மேற்கு,வலி – கிழக்கு உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவுசெய்த கழகங்களுக்கிடையிலான சுற்றுப்போட்டி.

**விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளுமிடம்.**

(1) ரஞ்சனாஸ் புடைவையகம், சுன்னாகம்.
(2) ஸ்ரீ தனுசன் பல் பொருள் வாணிபம், மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**விண்ணப்ப முடிவு திகதி- 23 - 11 - 1994 மாலை**

—விளையாட்டுக்குழு.

(7810)

## யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

வழங்கும்

## முழுநிலா நாள் கருத்தரங்கு

காலம்: 17 - 11 - 1994 பிற்பகல் 3மணி

இடம்: குமாரசுவாமி மண்டபம்

கருத்துரை I: மதுவின் தொழிற்பாடும் விளைவுகளும்

வழங்குபவர்:
கலாநிதி க. சிவபாலன்
(தலைவர், உடற்றொழிலியற்றுறை மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

கருத்துரை: II: உளமெய்ப்பாடு நோய்கள்
(உளம்சார் உடல் நோய்கள்)
(Phycho Somatic disorders)

வழங்குபவர்:
கலாநிதி டி. ஜே. சோமசுந்தரம்
தலைவர், உளமருத்துவத்துறை, மருத்துவ பீடம்
மனோ வைத்திய நிபுணர்,
யாழ்ப்பாணம்/தெல்லிப்பளை வைத்தியசாலை

★ ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம். ★

செயலாளர்,
யா. இ. க. ப மா. ச.

[சி-9684]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி,202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17—11—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை சுந்தரமூர்த்தி

(ஓய்வுபெற்ற விவசாய உதவிப் பணிப்பாளர்)
காரைநகர்

ச. சுந்தரமூர்த்தி 14-11-94இல் சிவபதமடைந்தார். அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 17-11-94 வியாழக்கிழமை காலை 8-00மணியளவில் திருநெல்வேலி வளாக ஒழுங்கையிலுள்ள இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
சு. சிவகாமசுந்தரி.
[மனைவி]

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.

[33790]

### கணபதிப்பிள்ளை கதிரவேலு

(முன்னாள் சுருட்டு முதலாளி)

சுதுமலை வடக்கு அம்மன் கோயிலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கதிரவேலு நேற்றுக்காலமானார் இவர் கண்மணியின் அன்புக் கணவரும், அழகேந்திரராஜா (கொழும்பு), செல்வம் நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), மகாலிங்கம் (சிவா மில் உரிமையாளர்), பஞ்சலிங்கம் (ரட்ணம் சுருட்டு), முத்துலிங்கம் ((பிரதேச சபை, உடுவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராணி, தனலஷ்மி (கோப்பாய்), வசந்தா, கமலா, மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், எதிர்மனசிங்கம் (R. M. P. மன்னார்), பொன்னுச்சாமி, விசுவலிங்கம் (R.M.P. மட்டுவில்-கனடா), குமாரசாமி (முன்னாள் ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று [17-11-94) வியாழக்கிழமை மு. ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. செல்வன், க. மகாலிங்கம்,
க. பஞ்சலிங்கம், க. முத்துலிங்கம்
(மகன்மார்).

சுதுமலைவடக்கு,
மானிப்பாய்.

(33783)

### திருமதி செல்லையா அம்மா

திருமதி செல்லையா அம்மா காலமானார் அன்னார் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. செல்லையாவின் அன்பு மனைவியும், சிவக்கொழுந்து (பண்டிதரும் பெரியதம்பிரான் ஆதீனகர்த்தரும்), முருகேசு, சிறிஸ்கந்தராசா, சிவலிங்கராஜா, காலம்சென்ற மல்லிகாதேவி, மகேஸ்வரி, செல்லக்கிளி ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிகலாதேவி, பிரதீபன், ராதிகா, கார்த்திகா, கரிகரன், சுதாகரன், கீத்தா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16 – 11 – 94 அன்று பி.ப. 2.00 மணிக்கு வல்லை மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
**V.S.** குமார் (சிவகுமார்)
(பேரன்)

பெரியதம்பிரான் கோயில் வீதி,
இமையாணன், உடுப்பிட்டி.

(33795)

### திருமதி, சின்னையா நேசம்

திருமதி. சின்னையா நேசம் 13 -11- 94 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்.

இவர் சுந்தரம் சின்னையாவின் அன்பு மனைவியும், மைக்கல் ஆறுமுகம் என்பவரின் அன்புச் சகோதரியும், கிறிஸ்ரின் ஜெபராணி, வெஸ்லி - ஜெபநேசன் (கனடா), நேசராணி, செல்வராணி (நோர்வே), இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், லோ. இ. கனிசியஸ் ஜெயநாதன், உமாதேவி என்பவர்களின் மாமியும், பிறிஸ் சில்லாவின் பேர்த்தியுமாவர்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று(17-11-94) பிற்பகல் 2 30 மணிக்கு இல. 55, புங்கன்குளம், அரியாலையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள் சபையைச் சேர்ந்தோர் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. சின்னையா
(கணவர்)

55, புங்கன்குளம் வீதி
அரியாலை.

(33792)

### இ. மணி

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் யாழ். பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இ.மணி 15- 11- 94 அன்று பிரான்ஸில் காலமானார்.

இவர் விமலாவின் (பேபி) அன்புக் கணவரும், செந்தூரன், ஆரணி வருணன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22- 11-94 பிரான்சில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம் இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. எஸ். குணசிங்கம்
(மாமா)

இல. 03, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(33800)

### நாகமணி நடராசா

கரம்பொன் கிழக்கு, ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நா.நடராசா அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், தர்மபூபதியின் அன்புக் கணவரும், தயாபரன், தயானந்தன், தயாளினி, தயாளன், தயாரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் கணபதிப்பிள்ளை (பஞ்சாட்சரம்), வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-11-94( இல. 7/1 றெயில்வே றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மு.ப 10 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
[illegible]

(33799)

## கார்த்திகை திருவிளக்கு

யாழ்ப்பாணம், நவ. 17

கார்த்திகை விளக்கீடு என்று அழைக்கப்படும் கார்த்திகைத் தீப நாள் இன்றாகும்.

இன்று முருகன், விஷ்ணு ஆலயங்கள் தவிர்ந்த ஏனைய ஆலயங்களில் திருவிளக்கு ஏற்றப்பட்டு 'சொக்கப்பனை' யும் எரிக்கப்படும்.

வீடுகளிலும் இன்று தீபாலங்காரம் செய்யப்படும்.

முருகன் விஷ்ணு ஆலயங்களில் நாளை திருவிளக்கு ஏற்றப்படும். திருக்கார்த்திகைத் திருவிழாவும் நடைபெறும்.

[அ-28-30]

## ஆசிரியருக்கு செய்முறை பயிற்சி

யாழ்ப்பாணம், நவ. 17

வாழ்க்கைத் திறன் கல்வி செய்முறைப் பயிற்சியை இது வரை பெறாத, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, கோப்பாய் கோட்டங்களுக்கான பாடசாலைகளில் வாழ்க்கைத் திறன்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செய்முறைப் பயிற்சி —

இன்றும், நாளையும், நாளை மறுதினமும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## சிறிமாவோவின் செயலாளர் ஹேமசிறி!

கொழும்பு, நவ. 17

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் செயலாளராக திரு. ஹேமசிறி பெர்னாண்டோவை நியமிப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இவர் தற்போது டெலிகொம் நிறுவனத்தின் தலைவராக பணிபுரிந்து வருகின்றார்.

இவர் சமூக விஞ்ஞானத் துறைப் பட்டதாரியும் முகாமைத்துவத்துறையில் பயிற்சி பெற்றவருமாவார்.

இதுவரை அப்பதவியிலிருந்த பாலபட்ட பெண்டி ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டது தெரிந்ததே. (உ-க)

## சந்திரிகா செய்தியாளர் சந்திப்பு

ஜனாதிபதி சந்திரிகா மாதத்துக்கு ஒரு தடவை செய்தியாளர்களைச் சந்திப்பார்.

நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்ததாக அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## பிரதி அமைச்சர் நியமனங்கள் தாமதமாகும்

பிரதி அமைச்சர்கள் நியமனம் அடுத்த இரண்டு தினங்களில் இடம்பெறும்.

அமைச்சரவைக்கூட்டத்தின் பின்னர் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

## நாளை

யாழ். கில்னர் மண்டபத்தில் உள்ள பரி. பேதுரு சிறுவர் பாடசாலை பெற்றோர் தின விழாவும் கண்காட்சியும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி முதல் பிற்பகல் 2-00மணி வரை நடைபெறும். (உ)

**வல்லைக்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் கரையோரப் பகுதி மக்களின் குடியிருப்புக்கள் பல சேதமடைந்தன. கால்நடைகள் பலவும் காயமடைந்தன. (ஒ- 155

**சமாதான..**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை எனினும் அத்தகைய பிரகடனம் உண்மையா என்பதை அரசு பரிசீலித்து வருகிறது.

'யாழ்ப்பாணம் சென்று சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டு. ஆனால் அதற்கான திகதியை அரசாங்கம் இன்னும் தீர்மானிக்கவில்லை''— என்றார்.

செய்தியாளர் மாநாட்டில் தகவல்துறை அமைச்சுச் செயலாளர் லயனல் பெர்னாண்டோ, அமைச்சர்கள், தர்மசிறி சேனநாயக்கா, பேராசிரியர் பீரிஸ் கொழும்பு மாவட்ட எம். பி. அலவி மௌலானா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(உ-ஒ-ஜ-எ-க)

## தொண்டா மீது ஐ.தே.க. நடவடிக்கை இல்லை!

கொழும்பு, நவ 17

அமைச்சர் தொண்டமானுக்குஎதிராக எவ்வித நடவடிக்கையும் இப்போது எடுக்கப்பட மாட்டாது.

ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த திங்கட்கிழமை ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தில் தொண்டமான் பொ.ஐ.மு. அரசில் அமைச்சரானது குறித்து ஆராயப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## ஐ. தே. கவின் தவிசாளராக ஏ.ஸி.எஸ் ஹமீத்

முன்னாள் அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத், ஐ. தே. கவின் புதிய தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி எம். ஸி. எம். கலீல் காலமான பின்னர் இப்பதவி வெற்றிடமாக இருந்து வந்தது. (உ-க)

## "ஒம்புட்ஸ்மன்" அடுத்த மாதம் நியமனம்

கொழும்பு, நவ. 17

ஆலாட்சி அதிகாரி(ஒம்புட்ஸ்மன்) அடுத்த மாதம் ஆறாம் திகதி நியமிக்கப்படுவார்.

நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இதனை வெளியிட்டார்.

## அறியத்தரவும்

சிமாட்டி பண்ணை மயிலங்காடு, சுன்னாகம் **11 — 11 — 94** வெள்ளிக்கிழமை இரவு கோழிக்கூடு உடைத்து தொகையாக கோழிகள் திருடப்பட்டுள்ளன.

இது பற்றி தகவல் அறிந்தோர் சுன்னாகம் தமிழீழ காவல் நிலையத்திலோ, சிமாட்டி பண்ணையிலோ அறியத்தரவும். சன்மானம வழங்கப்படும்.

(சி-9624)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
**05—10—1927**

மறைவு:
**08—12—1992**



### அமரர் பொன்னம்பலம் நடராசா

(புங்குடுதீவு - 7)

திதி: **17 · 11 · 94**

அன்புக் தந்தையே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றாலும் உங்கள் அன்பு என்றும் எமுடன் நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப் பிள்ளைகள்,

15/1, புதிய வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(33793)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலனம் கனகசபை

காரைநகர் அல்லின் வீதியை வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையை வதிவிடமாகக் கொண்டிருந்தவருமான திருமதி பாலனம் கனகசபை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேல் (சட்டம்பியார்) தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், சின்னத்தம்பி, கனகசபையின் அன்பு மனைவியும், திருமதி அ யமலர் அரியரத்தினம்(ஓய்வுபெற்ற அதிபர், ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை-காரைநகர்), காலஞ்சென்ற குலசேகரம் (Ceylon Foreign Trades), திருமதி மனோரஞ்சிதம், பத்மநாதன், திரு.குலராசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குணரத்தினம், காலஞ்சென்ற குணநாயகம் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் சகோதரனும், பொ.அரியரத்தினம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), பத்மநாதன்(Marketing Department), கிருபைமலர், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரமானந்தன் (லண்டன்), அமிர்தானந்தன்-அருந்ததி (லண்டன்), டாக்டர் அரியராணி, அரியவதனா, அரியறோகினி குலரஞ்சன், குலரஞ்சனி, (கொலண்ட்), குலராஜினி, குலறோகினி, சற்குணகேவி, சற்குணராஜா, அருள்ராஜா, அருள்ராணி ஆகியோரின் பேர்த்தியும், றுர்ஷிகா,றோசிக்கா, ருத், மனோஜ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று காலை 10-00 மணிக்கு வட்டுக்கோட்டை சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அரியமலர்
(மகள்)

(33801)

### கனகராயர் சொக்கநாதன்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

மல்லாகத்தைச் சேர்ந்த இளைப்பாறிய தபால் அதிபர் கனகராயர் சொக்கநாதன் 16-11-94 இல் காலமானார்.

அன்னார் சொர்ணதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீரமணன், பிரகாமி (யா/மகாஜனாக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-11-94) பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
சொர்ணதேவி
(மனைவி)

(33798)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org